கல்லூரிக் கல்வித் துறை சென்னை–600 006

அறிவிக்கை

மாநில அரசின் பி.எச்.டி ஆராய்ச்சி மாணவர்கட்கு, ஆராய்ச்சி படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம்–2016–ஆம் ஆண்டு

---

மாநில அரசின் "பி.எச்.டி" ஆராய்ச்சி படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் படிப்பு உதவித் தொகை பெற விரும்பும் தகுதியுள்ள ஆராய்ச்சி படிப்பு மாணவர்கள் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களை அணுகி குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகுதி:–

1. முதுநிலை / எம்.பில்., பட்டப்படிப்பிற்கு பின்னர் அங்கீகரிக்கப்பட்ட முறையான முழுநேர பி.எச்.டி ஆராய்ச்சி படிப்பில் ஏதேனும் ஒரு அரசு அல்லது அரசு உதவி பெறும் கலை, அறிவியல் கல்லூரியில் 2016 ஜனவரி முதல் டிசம்பர் வரை பி.எச்.டி படிப்பில் முதல் ஆண்டில் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. முதுநிலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்று முழுநேர ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவர்கள் முதுநிலை பட்டப்படிப்பில் 60%-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
3. எம்.பில்., தேர்ச்சி பெற்று முழுநேர ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் மாணவர்கள் எம்.பில்., பட்டப்படிப்பில் 60%-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.
4. இளநிலை ஆராய்ச்சி பெல்லோஷிப் (JRF) தேர்வு எழுதி அத்தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
5. வேறு எந்த வகையான நிதி உதவி பெறுபவராக இருத்தல் கூடாது.
6. பகுதி நேர ஆராய்ச்சி மாணவராக இருத்தல் கூடாது.
7. இத்திட்டத்தின் கீழ் 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.
8. இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதம் தலா ரூ.3,000/– வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.36,000/– வழங்கப்படும்.
9. விண்ணப்பம் கீழ்க்கண்ட படிவத்தில் ஆராய்ச்சிப் படிப்பு வழிகாட்டியின் (Guide) பரிந்துரையுடனும் கல்லூரி முதல்வரின் மேலொப்பத்துடனும் "கல்லூரிக் கல்வி இயக்குநர், ஈ.வெ.கி.சம்பத் மாளிகை, கல்லூரிச் சாலை, சென்னை–600 006" என்ற முகவரிக்கு 31.12.2016 தேதிக்குள் இவ்வலுவலகத்தில் கிடைக்கும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. மேற்குறிப்பட்ட காலக்கெடுவிற்கு பிறகு இவ்வலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் இல்லாமல் குறைபாடுகளுடன் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவற்றின் மீது எவ்வித கடித போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஜெ.மஞ்சுளா 14/12/16

கல்லூரிக் கல்வி இயக்குநர்

# கல்லூரிக் கல்வித் துறை, சென்னை - 600 006

## ஆராய்ச்சிப் படிப்பு உதவித் தொகை விண்ணப்பப் படிவம் - 2016 ஜனவரி முதல் டிசம்பர் முடிய

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | பாலினம் | : | ஆண்/பெண் |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | சாதி சான்றிதழின் நகல் (முதல்வரின் மேலோப்பத்துடன்) | : | |
| 5. | நிரந்தர முகவரி | : | |
| 6. | தற்போதைய முகவரி | : | |
| 7. | ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொண்டுள்ள கல்லூரியின் பெயர் மற்றும் முகவரி | : | |
| 8. | ஆராய்ச்சி பயில பல்கலைக்கழகத்தால் ஆராய்ச்சிக் காலம் குறிப்பிடப்பட்ட அனுமதி கடித நகல் இணைக்கப்பட வேண்டும். இணைக்கப்படவில்லை எனில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். | : | |
| 9. | முதுநிலை பட்டப்படிப்பில் பயின்ற பாடம் மற்றும் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் விழுக்காடு குறிப்பிடப்பட வேண்டும் (முதுநிலைப் பட்டப்படிப்பின் சான்றொப்பமிட்ட மதிப்பெண் சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்) 60%க்கு மேல் மதிப்பெண் இருத்தல் வேண்டும். | : | |
| 10. | எம்.பில் படிப்பில் தேர்ச்சி பெற்றிருப்பின் சான்றொப்பமிட்ட மதிப்பெண் சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும் 60%க்கு மேல் மதிப்பெண் இருத்தல் வேண்டும். | : | |
| 11. | இளநிலை ஆராய்ச்சி பெல்லோஷிப் (JRF) தேர்வு எழுதி அத்தேர்வில் வெற்றி பெற்றவராக இருப்பின் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தேர்வு எழுதியதற்கான ஆதாரங்கள் இணைக்கப்படல் வேண்டும். | : | |

| | | | |
|---|---|---|---|
| 12. | ஆராய்ச்சிப் படிப்பில் முதலாண்டு வகுப்பில் சேர்ந்த நாள் (பல்கலைக்கழக அனுமதிக் கடிதத்தில் உள்ளவாறு) | : | |
| 13. | வேறு வகையில் நிதி உதவி ஏதும் பெறுபவரா? | : | |
| 14. | விண்ணப்பதாரரின் கையொப்பம் | : | |
| 15. | வழிகாட்டியின் (GUIDE) குறிப்புரை மற்றும் பரிந்துரை (வழிகாட்டியின் கையொப்பம், பெயர், பதவி மற்றும் அலுவலக முத்திரையுடன்) | : | |
| 16. | கல்லூரி முதல்வரின் பரிந்துரை | : | |

கல்லூரி முதல்வரின் கையொப்பம்/
அலுவலக முத்திரையுடன்